இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மனிதவள முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் கற்கைநெறி
மட்டம் 02
HRC2405 – மனித வள முகாமைத்துவத்துக்கான பொருளாதார போக்குகள்
இறுதிப் பரீட்சை – 2024/2025
காலம் – மூன்று (03) மணித்தியாலங்கள்

| திகதி: 30.08.2025 | நேரம்: 09.30 மு.ப - 12.30 பி.ப |
|---|---|

அறிவுறுத்தல்கள்:

- ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்குக. அனைத்து கேள்விகளும் சமபுள்ளிகளை கொண்டது .

வினா 01

A.
- I. நுண்பாகப் பொருளியல் மற்றும் பேரினப் பொருளியளுக்கு இடையிலான வேறுபாட்டை பொருத்தமான உதாரணங்களை குறிப்பிட்டு விளக்குக. (04 புள்ளிகள்)
- II. அருமை என்பது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மட்டும் முகம் கொடுக்கக்கூடிய அடிப்படை பிரச்சினையாகும். இக்கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

B.
- I. உற்பத்தி சாத்திய வளையி ஒன்றை அமைக்கும் போது பயன்படும் அனுமானங்கள் என்ன? விளக்குக. (04 புள்ளிகள்)
- II. உற்பத்தி சாத்திய வளையியை பயன்படுத்தி பின்வருவனவற்றை விளக்குக. உங்களது பதில்களை விளக்கப்படங்களை பயன்படுத்தி விளக்குக.
  - a. அமையச்செலவு
  - b. வினைத்திறனற்ற வள ஒதுக்கீடு (05 புள்ளிகள்)
- III. பொருளாதார சூழலின் பல்வேறு பகுதிகளைப் புரிந்துகொள்வது வணிக முகாமையாளர்களுக்கு பயனுள்ள தீர்மானங்களை மேற்கொள்ள உதவுகிறது. உதாரணங்களுடன் விளக்குக. (07 புள்ளிகள்)

வினா 02

A.
- I. வரைவிலக்கணப்படுத்துக .
  a. கேள்வித் தொகை b. கேள்வி c. விளைதிறனான கேள்வி (06 புள்ளிகள்)
- II. விலையின் தொழிற்பாடுகள யாவை? விளக்குக. (04 புள்ளிகள்)

B. கேள்வி மற்றும் நிரம்பல் ஆய்வைப் பயன்படுத்தி கீழுள்ள மாற்றங்கள் தரப்பட்ட சந்தையை எவ்வாறு மாற்றமடையச் செய்கின்றது என்பதை வரைபடங்களை பயன்படுத்தி விளக்குக.
- I. மருத்துவ அறிக்கையானது, பவுடர் பால் (Milk powder) குடிப்பது மனித ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்று கூறுகிறது, Fresh Milk , இற்கான சந்தை
- II. தொழில்நுட்ப முன்னேற்றமானது நெல் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்துள்ளது, அரிசிக்கான சந்தை.
- III. பேக்கரி தொழிலில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது, பேக்கரி பொருட்களுக்கான சந்தை. (09 புள்ளிகள்)

C. எதிர்காலத்தில் மின்னியல் பொருட்களின் விலை உயரும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள், இது மின்னியல் பொருட்களின் சந்தையை எவ்வாறு பாதிக்கும்? விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்குங்கள். (06 புள்ளிகள்)

வினா 03

A.

I. ஊழியர்களுக்கான கேள்வி ஏன் வழிவந்த கேள்வியாக (Derived Demand) கருதப்படுகின்றது? உதாரணங்களை குறிப்பிட்டு விளக்குக. (04புள்ளிகள்)

II. அரச விதிமுறையானது ஊழியர் சந்தையை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை வரைபடங்களுடன் விளக்குக. (உதாரணம்- குறைந்தபட்ச சட்ட ஊதியத்தை அறிமுகப்படுத்துதல் ஊழியர் சந்தையை எவ்வாறு பாதிக்கின்றது? (06 புள்ளிகள்)

III. ஆடைத்துறையின் தொழிநுட்ப அபிவிருத்தியானது இயந்திரங்களை இயக்கும் திறமைவாய்ந்த ஊழியர்களுக்கான சந்தையை எவ்வாறு பாதிக்கின்றது? (05 புள்ளிகள்)

B.

I. அதிக எண்ணிக்கையிலான தொழிநுட்ப நிபுணர்களின் இடம்பெயர்வு (Migration) தொழிநுட்ப நிபுணர்களுக்கான வேலை சந்தையை எவ்வாறு பாதிக்கும்? விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக. (05 புள்ளிகள்)

II. ஆடைத் துறையில் உள்ள நிறுவனங்கள் மேலும் மேலும் பணச் சலுகைகளை (pecuniary benefits) வழங்கத் தொடங்கியுள்ளன, இது ஆடைத் துறையில் தொழிலாளர் சந்தையை எவ்வாறு பாதிக்கும்? (05 புள்ளிகள்)

வினா 04

A.

I. வரைவிலக்கணப்படுத்துக.

a. தொழிலாளர் கேள்வி நெகிழ்ச்சி

b. தொழிலாளர் நிரம்பல் நெகிழ்ச்சி

(06 புள்ளிகள்)

II. ஒரு குறிப்பிட்ட வகை தொழிலாளர் கேள்வி மற்றும் தொழிலாளர் நிரம்பல் இரண்டும் நெகிழ்வு கொண்டதாக இருந்தால், தொழிலாளர நிரம்பலில் ஏற்படும் குறைவு குறிப்பிட்ட தொழிலாளர் சந்தையை எவ்வாறு பாதிக்கும்? ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக். (06 புள்ளிகள்)

B.

I. நிறைபோட்டிச் சந்தையையும் தனியுரிமைப் போட்டிச் சந்தையையும் ஒப்பிட்டு வேறுபடுத்துக . (06 புள்ளிகள்)

II. நிறைபோட்டிச் சந்தையயில் ஏன் நிறுவனம் மற்றும் தொழிலார்கள் விலையேற்போர்களாக காணப்படுவர்? விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக் (07 புள்ளிகள்)

வினா 05

A.

I. “வணிக சுழற்சிகள்” (Business cycles) என்றால் என்ன? ஒரு விளக்கப்படத்தைப் பயன்படுத்தி விளக்குங்கள். (06 புள்ளிகள்).

II. “சுழற்சி வேலையின்மை” (cyclical unemployment) என்றால் என்ன? விளக்குங்கள். (06 புள்ளிகள்).

III. வரைவிலக்கணப்படுத்துக.

a. வேலையின்மை வீதம், (Unemployment Rate) b. தொழிலாளர் பங்கேற்பு வீதம் (Labour force participation rate) (05 புள்ளிகள்).

B.

I. பொருளாதார வளர்ச்சிக்கான மூலாதாரங்களை குறிப்பிடுக. (05 புள்ளிகள்).

II. பொருளாதார வளர்ச்சிக்கான செலவுகள் என்ன? விளக்குக். (05 புள்ளிகள்).

-பதிப்புரிமையுடையது-